**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| Name | ஆனந்தராஜ் | -- | |
|---|---|---|---|
| Father's Name | பாலசுப்பிரமணியம் | Calling | ஆயுதப்படை காவலர் |
| Village | ராஜபாளையம் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்ராப் ஆயுதப்படையில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அங்கு நான் பணிபுரிந்தபோது 24.09.2022 ம் தேதியில் ராஜபாளையத்தில் வனவேங்கைகள் கட்சியினர் நடத்தும் போராட்டத்திற்கு நானும் மற்றும் ஆயுதப்படை போலீசாரும் பாதுகாப்பிற்காக சென்றிருந்தோம். அன்று மாலை 06.30 மணியளவில் நாங்கள் வடக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது ராஜபாளையம் – தென்காசி ரோட்டில் என் டி ஆர் சூப்பர் மாரக்கெட் அருகில் வனவேங்கை கட்சியினர் போராட்டம் நடத்துவதாக தெரிந்து நாங்கள் அங்கு சென்றோம். எங்களுடன் உதவி ஆய்வாளர் மூவேந்தன், சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமை காவலர் மாரி பூபதி, தெற்கு காவல் நிலைய தலைமை காவலர் மணி ராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகியோரும் சென்றோம். மேற்படி இடத்திற்கு நாங்கள் செல்லும்போது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்தது. கூட்டம் நிறைய இருந்தது. அதில் பின்னர் பெயர், விலாசம் தெரிந்துக்கொண்ட சஞ்சய், காளிராஜ், கடற்கரை, ராம்குமார், முத்துப்பாண்டி, சண்முகவேல், ராஜா, பூமி ராஜா, ஞானசேகரன், முருகன், சஞ்சீவ் ராஜ், கந்தன் மகன் முத்துப்பாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து ஆகியோர்கள் நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியததுபோல் குறவர் இனத்தையையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டி போராட்டம் செய்துக்கொண்டிருந்தார்கள். அது காளிராஜ், முத்துப்பாண்டி, முருகன் ஆகியோர்கள் தலைமை காவலர் மணிராஜ், முதல்நிலை காவலர் செல்லபாண்டி ஆகியோர்களை பார்த்து தாயோலிகளா கூதி மகன்களா என்று அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை பார்த்து தேவையில்லாமல் பிரச்சனை எதுவும் செய்யவேண்டாம் என்றும் கலைந்து செல்லுங்கள் என்று கூறினோம். அதன்

பிறகு அவர்கள் சுமார் 50 மீ தொலைவிலுள்ள பாம்பே லாட்ஜ் அருகில் சென்று காளிராஜூம் மற்றும் பெயர் தெரியாத இரண்டு நபர்களும் கற்களை வைத்து போலீசாராகிய எங்களை நோக்கி எரிந்தார்கள். நாங்கள் விலகி கொண்டோம். ஆனால் மணி ராஜ் மற்றம் செல்வபாண்டிக்கு கற்கள்பட்டு மணிராஜ்க்கு இடது பக்க தலை மற்றும் வலது கை முட்டு, இடது தோள்பட்டை மற்றும் உடம்பிலும் காயங்கள் ஏற்பட்டது. செல்வபாண்டிக்கு வலது காது அருகில் கல்பட்டு போலீசாராகிய நாங்கள் மேற்படி சம்பவத்தை பார்த்து அவர்களை தள்ளிவிட்டு கலைந்து போக்சொன்னோம். அப்போது காளிராஜூம் மற்றொரு பெயர் தெரியாத நபரும் அரசாங்கத்தை எதிர்த்து நாங்கள் அப்படித்தான் போராட்டம் செய்வோம். அதற்கு யாரும் தடை செய்தால் போலீசார் என்றும் பாராமல் கொலை செய்யவும் தயங்க மாட்டோம் என்று சொன்னார்கள். மேற்படி சம்பவம் அருகில் இட்லி கடை வைத்திருக்கும் கிறிஸ்டோபர், பீடா கடை வைத்திருக்கும் சிவராமன் ஆகியோர்களுக்கும் தெரியும். பின்னர் காய்பபட்ட மணி மற்றும் செல்வபாண்டி ஆகியோர்களை அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு உடன் நானும் ராஜபாளையம் அரசு மருததுவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். மணி ராஜ் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். செல்வபாண்டி அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு புறநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார். இது சம்பந்தமாக மணி ராஜ் புகார் கொடுத்தார். எதிரிகள் கற்களை கொண்டு வீசியபோது நான் பார்த்ததால் மேற்படி கற்களை பார்த்தால என்னால் அடையாளம் காட்டமுடியும். அந்த கற்கள் ஏற்கனவே சாபொ1 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடைபெற்ற இடம் எப்போதும் போக்குவரத்து அதிகமாக இருக்கும் இடம்தான். சம்பவ இடத்திலிருந்து 50 மீ தூரத்தில் புறகாவல் நிலையம் உள்ளது. சிக்னல் 80 மீ தூரத்தில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து பார்த்தால் சிக்னல் தெளிவாக தெரியும். போக்குவரத்து சிக்னலில் நின்ற காவலர் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் அவர்தான் காவல்நிலையத்திற்கே தகவல் சொன்னார். மணிராஜ் மற்றும் செல்வபாண்டி ஆகியோருடன் 5 போலீசாரும் ஒன்றாகத்தான் சென்றோம். நாங்கள் செல்லும்போது போராட்டம் செய்துக்கொண்டிருந்தார்கள். போராட்டம் செய்யும்போது அவர்கள் கையில் துண்டு பிரசுராமோ கட்சி கொடிகளோ எதுவும் இல்லை என்றால் நினைவில்லை. அவர்கள் கையில் என்ன வைத்திருந்தாரகள் என்று நினைவில்லை. போராட்டம் சுமார் அரை மணிநேரம் நடந்திருக்கும். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபிறகு சுமார் 15 நிமிடம்தான் போராட்டம் நடந்திருக்கும். போராட்டத்தில் சுமார் 100 பேருக்கு மேல் இருப்பார்கள். இதே கோரிக்கைக்காக சம்பவத்திற்கு முதல் நாள் தமிழகம் முழுவதும் போராட்டம் நடந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் போராட்டம் சூப்பர் மார்க்கெட் அருகே நடந்து 10 நிமிடம் கழித்து நாங்கள் எல்லாரும் இருக்கும்போதே இந்த

போராட்டம் பாம்பே லாட்ஜ் அருகே நடந்தது. போராட்டம் செய்த நபர்களின் விவரங்கள் பற்றி எனக்கு சம்பவ இடத்தில் தெரியாது. இதேத்தான் ஆய்வாளர்ங விசாரிக்கும்போதும் சொன்னேன். நான் சொன்னதுபோல சொன்ன இடத்தில் எந்த போராட்டமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானோ மற்ற சாட்சிகளோ அந்த தேதியில் அங்கு பணியில் இருந்தோம் என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகளால் அசா1, 2 க்கு எந்தவொரு காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**